மின்வெட்டை தவிர்க்கவே யூனிட் ரூ.35-க்கு கொள்முதல்

மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம்

சென்னை,அக். 13: மத்திய தொகுப்பிலிருந்து வரும் மின்சாரம் தடைபட்டுள்ளதால், தமிழகத்தில் மின்வெட்டைத் தவிர்க்கவே தனியாரிடமிருந்து எரிவாயு மின்சாரம் ஒரு யூனிட் ரூ.35-க்கு 15 நாள்களுக்கு மட்டும் கொள்முதல் செய்யப்படுவதாக அமைச்சர் சி.டி. ஆர்.நிர்மல் குமார் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழகத்தில் மின் வெட்டு பிரச்னை அதிகரித்து வரும்நிலையில், தனியாரிடமிருந்து ஒரு யூனிட் மின்சாரம் அதிகபட்சமாக ரூ.35-க்கு கொள்முதல் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கு திமுக, அதிமுக, பாமக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், இந்த விவகாரம் குறித்து சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் கூறியதாவது:

தமிழகத்தின் மின்தேவை கடந்த ஆண்டு 16,800 மெகாவாட்டாக இருந்தது. தற்போது 21,700 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. அதிகப்படியான வெப்பம், எல் நினோ தாக்கம், காற்றாலை மின் உற்பத்தி குறைவு ஆகியவை இதற்கு காரணங்களாகும். மேலும், என்எல்சி நிறுவனத்திடமிருந்து மத்திய மின் தொகுப்பு வழியாகக் கிடைக்க வேண்டிய 1,850 மெகாவாட் மின்சாரம் கடந்த மாதம் முதல் கிடைக்கவில்லை.

ஒப்பந்தம் செய்யப்பட்ட 3,500 மெகாவாட் காற்றாலை மின்சாரத்தில் சுமார் 500 மெகாவாட் மட்டுமே கிடைக்கிறது. இதனால் மின்சார விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆகையால், 3,500 மெகாவாட் மின் கொள்முதலுக்கு டெண்டர் கோரப்பட்டுள்ளது. எரிவாயுவில் இருந்து தயாரிக்கப்படும் மின்சாரத்துக்கு மட்டும் யூனிட் ரூ. 35-க்கு கொள்முதல் செய்யப்படவுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் நீண்டகால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படாததால், தற்போது அவசரமாக மின்சாரம் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

4,000 முதல் 5,000 மெகாவாட் மின்சாரம்கொள்முதல்செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தப் புள்ளியும், ஐந்து ஆண்டுகளுக்கு 1,500 முதல் 2,000 மெகாவாட் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளியும் வெளியிடப்படும். மேலும், 2028-29 ஆம் ஆண்டுக்குள் கூடுதலாக 6,000 முதல் 8,000 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

‘15 நாள்களுக்கு தினசரி ரூ. 5 கோடி கூடுதல் செலவாகும்’

அக்.15 முதல் அக்.31 வரை மட்டுமே யூனிட் ரூ.35-க்கு 1,500 மெகாவாட் வாங்கப்படும் என்றும் இதனால் தினசரி சுமார் ரூ. 5 கோடி செலவாகும் என்றும் மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்தார்.

மேலும், அஸ்ஸாம் மாநிலத்தில் இருந்து 430 மெகாவாட் ரூ.8-க்கு மின்சாரம் வாங்கப்பட்டது. பருவநிலை மாற்றத்தால் இந்த அளவுக்கு மின்தட்டுப்பாடு இருக்கும் என மத்திய அரசு கணிக்கவில்லை. திடீரென மத்திய தொகுப்பு மின்சாரம் கிடைக்காததால் யூனிட் ரூ.35-க்கு வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. 6 முதல் 12 மணி வரையிலான உச்சபட்ச தேவை நேரத்தில் இந்த மின்சாரம் பயன்படுத்தப்படும் என்றார் அவர்.

2013-க்குப் பிறகு புதிய மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் இல்லை

மின்வாரியம்

சென்னை, அக். 13: தமிழகத்தில் கடந்த 2013-க்கு பிறகு மின்சாரக் கொள்முதலில் புதிய ஒப்பந்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை என மின்வாரியம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மின்சார வாரியம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தின் மின்சாரத் தேவையைக் கருத்தில் கொண்டு, கடந்த 2014 முதல் 10 மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து மொத்தம் 2,830 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தங்கள் நடைமுறையில் உள்ளன. இந்த ஒப்பந்தங்கள் 2013-இல் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 8 ஒப்பந்தங்கள் 2028-ஆம் ஆண்டிலும், மிதமுள்ள 2 ஒப்பந்தங்கள் 2029-ஆம் ஆண்டிலும் காலாவதியாக உள்ளன.

கடந்த 2013-க்குப் பிறகு புதிய நீண்டகால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதேவேளையில், தமிழகத்தின் மின்சாரத் தேவை ஆண்டுதோறும் அதிகரித்து வந்ததால், மின்சாரப் பற்றாக்குறையும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், தமிழகத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால மின்சாரத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்வதற்குத் தேவையான மாற்றங்கள் மற்றும் மறுஆய்வுகளை மேற்கொண்ட பின்னர், புதிய நீண்டகால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும்.

இதன்மூலம், அதிகரித்து வரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், நுகர்வோருக்கு நம்பகமான மின்சார விநியோகத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகால மின்சாரக் கொள்முதல் ஒப்பந்தங்கள் விவரம்

நிறுவனங்கள்	ஒப்பந்தம் கையொப்பமான தேதி	மின்சாரம் வழங்கும் காலம்
1. டிபி. பவர் நிறுவனம்	19.08.2013	01.02.2014–31.03.2029
2.ஜிண்டால் பவர் நிறுவனம்	23.08.2013	01.02.2014–30.09.2028
3.பாரத் அலுமினியம் நிறுவனம்	23.08.2013	01.02.2014–30.09.2028
	10.12.2013	01.06.2014–30.09.2028
4. தரிவால் உள்கட்டமைப்பு நிறுவனம்	27.11.2013	01.06.2014–30.09.2028
5. கே.எஸ்.கே. மகாநதி மின் நிறுவனம்	27.11.2013	01.06.2014–31.03.2029
6. ஜி.எம்.ஆர். எரிசக்தி வர்த்தக நிறுவனம்	27.11.2013	01.06.2014–30.09.2028
7. பி.டி.சி. இந்தியா நிறுவனம்	18.12.2013	01.06.2014–30.09.2028
8. ஐ.எல். அண்ட் எஃப்.எஸ். தமிழ்நாடு மின் நிறுவனம்	12.12.2013	01.06.2014–30.09.2028
9. கோஸ்டல் எனர்ஜென் நிறுவனம்	19.12.2013	01.06.2014–30.09.2028
10. ஓ.பி.ஜி. மின் உற்பத்தி நிறுவனம்	12.12.2013	01.01.2014–30.09.2028

தவெக ஆட்சியில் பண வீக்கம், விலைவாசி உயர்வில் தமிழகம் முதலிடம்

சென்னை, அக். 13: தவெக ஆட்சியில் பண வீக்கம் மற்றும் விலைவாசி உயர்வில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

தவெக ஆட்சி அமைந்த நான்கே மாதங்களில் பண வீக்கத்திலும் விலைவாசி உயர்விலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. இவர்களுக்கு, அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுக்குள் வைக்கத் தெரியவில்லை என்றால்கூட பரவாயில்லை. விலைவாசி உயர்வே ஏற்படவில்லை என உணவுத் துறை அமைச்சர் சொல்லும் வடிகட்டிய பொய்யைக் கேட்டுத்தான் பொதுமக்கள் இன்னும் எரிச்சலில் இருக்கிறார்கள்.

மின் வெட்டு குறித்தும் அனைத்து எதிர்க்கட்சிகளும் கடந்த பல மாதங்களாக எச்சரித்து வந்தோம். அப்போதே சுதாரித்து உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். இப்போது, கடைசி நிமிஷத்தில் கதவைத் தட்டி, யூனிட்டுக்கு ரூ.35-க்கு வெளிச்சந்தையில் வாங்கப் போகிறார்களாம். திமுக ஆட்சியில் குறைந்த விலைக்கு வாங்கிய ஒப்பந்தங்களை ரத்து செய்துவிட்டு, இந்தியாவிலேயே இதுவரை எந்த மாநிலமும் வாங்காத அதிக விலைக்கு வாங்குவதுதான் இவர்கள் கொண்டு வந்துள்ள மாற்றமா?

குறுவை பொய்த்த நிலையில், டெல்டா விவசாயிகளின் பேச்சைக் கேட்காமல், ஜோதிடரின் பேச்சைக் கேட்டு மேட்டூர் அணையையும் தவறான தேதியில் திறந்து வைத்தார்கள். இப்போது சம்பா சாகுபடியும் சாத்தியமாகுமா எனத் தெரியாமல் கடைமடை விவசாயிகள் நீரின்றிப் பரிதவிக்கிறார்கள்.

இப்படி நம் கண் முன்னே தமிழ்நாடு சீரழிந்து கொண்டிருக்கிறது. இவர்களை வழிநடத்த வேண்டிய முதல்வரோ மாதம் ஒரு ஊருக்குச் சென்று விழா வைச் சிறப்பிப்பதிலேயே குறியாக இருக்கிறார்.

மொத்தத்தில், ஆட்சி நிர்வாகத்தின் அடிப்படைகூட அறியாதவர்களின் அலட்சியத்தால் எதிர்வரும் மாதங்களை தமிழ்நாட்டு மக்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்ற அச்சம்தான் மேலோங்குகிறது எனத் தெரிவித்துள்ளார் மு.க.ஸ்டாலின்.

அதிக விலைக்கு மின் கொள்முதல்: கடன் சுமையை அதிகரிக்கும்

தலைவர்கள் விமர்சனம்

சென்னை, அக். 13: நாட்டிலேயே அதிகபட்ச விலைக்கு மின்சாரத்தைக் கொள்முதல் செய்வதால், தமிழகத்தின் கடன் சுமை மேலும் அதிகரிக்கும் என அரசியல் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

உதயநிதி ஸ்டாலின் (எதிர்க் கட்சித் தலைவர்) : திமுக ஆட்சி காலத்தில்குறைந்தவிலைக்குமின்சாரம் வாங்கியதை முறைகேடு என்று சொல்லி ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்த தவெக அரசு, தற்போது ஒரு யூனிட் மின்சாரத்தை மிக மிக அதிக விலைக்கு ரூ.35 கொடுத்து வாங்கவிருக்கிறது. ஏற்கெனவே மின் கட்டணம் எனும் பெயரில் மக்களிடம் பகல் கொள்ளை அடிக்கும் இந்த அரசு, அதிக விலைக்கு மின் கொள்முதல் செய்து அதையும் பொதுமக்கள் தலையில் கட்டப் போவதை ஒருபோதும் ஏற்க முடியாது.

எடப்பாடி பழனிசாமி (அதிமுக): மின்வாரியம் கடன் சுமையால் தள்ளாடுவதாகவும், முந்தைய திமுக ஆட்சியில் மின் கட்டணத்தை நிர்ணயிப்பதில் குளறுபடி செய்துள்ளதாகவும் தவெக அரசு குற்றஞ்சாட்டியது. ஆனால், தற்போது அதிக விலைக்கு மின்சாரம் கொள்முதல் ஒப்பந்தமானது, தமிழக மின் வாரியத்தின் கடன் சுமையை மேலும் அதிகரிக்கும்.

அன்புமணி ராமதாஸ் (பாமக): மின் வாரியம் ஏற்கெனவே ரூ.2.47 லட்சம் கோடி கடனுடன் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. தற்போது, அதிக விலைக்கு 4,500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுவதால் ஏற்படும் ரூ.1 லட்சம் கோடிக்கும் கூடுதலான இழப்பையும் சேர்த்தால் தமிழ்நாடு மின்சார வாரியம் இன்னும் ஓராண்டுக்குக்கூட செயல்பட முடியாமல் முடங்கிவிட வாய்ப்புள்ளது. மேலும், மின் கட்டணத்தை இரு மடங்கு உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

பிரேமலதா விஜயகாந்த் (தேமுதிக): ஒருபுறம் மின்வெட்டு, மறுபுறம் மின்கட்டண உயர்வு என மக்கள் பல்வேறு சிரமங்களைச் சந்தித்து வரும் நிலையில், தனியாரிடம் இருந்து ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.35 என்ற விலைக்கு வாங்குவது எந்த வகையில் நியாயம்? மின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான புதிய திட்டங்களை அரசு உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்.

டிடிவி தினகரன் (அமமுக): கடந்த ஆட்சியில் அதிக ஊழலுக்கு வழிவகுத்த குறுகிய கால மின்சாரக் கொள்முதலைக் குறைத்து, மாதந்தோறும் சுமார் ரூ.200 கோடி சேமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று எரிசக்தித் துறை அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அதே குறுகிய காலக் கொள்முதல் முறையைப் பின்பற்றி, ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.35-க்கு அவசரகதியில் வாங்குவது முரண்பாடாக உள்ளது.

பொன்முடி உள்ளிட்டோருக்கு எதிரான அமலாக்கத் துறை வழக்கு ரத்து

சென்னை, அக். 13: செம்மண் முறைகேடு தொடர்பாக, முன்னாள் அமைச்சர் பொன்முடி உள்ளிட்டோருக்கு எதிரான சட்டவிரோத பணப் பரிமாற்றத் தடை சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்கை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 2006 முதல் 2011-ஆம் ஆண்டு வரையான திமுக ஆட்சியில் உயர்கல்வி மற்றும் கனிம வளங்கள், சுரங்கத் துறை அமைச்சராக க.பொன்முடி பதவி வகித்தார். அப்போது, விழுப்புரம் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிக அளவில் செம்மண் வெட்டி எடுத்ததன் மூலம், அரசுக்கு 28.36 கோடி இழப்பு ஏற்படுத்தியதாக ஊழல் தடுப்புத் துறை வழக்குப் பதிவு செய்தது.

முன்னாள் அமைச்சர் பொன்முடி, அவரது மகன் கௌதம சிகாமணி, உறவினர் ராஜமகேந்திரன் உள்ளிட்டோர் மீதான இந்த வழக்கை விசாரித்த விழுப்புரம் மாவட்ட நீதிமன்றம், குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து, கடந்த ஏப்ரல் மாதம் தீர்ப்பளித்தது.

முன்னதாக, செம்மண் முறைகேடு தொடர்பாக கிடைத்த பெருந்தொகை ஹவாலா பரிவர்த்தனை மூலம் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளதாகக் கூறி, முன்னாள் அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மகன் கௌதம சிகாமணி உள்ளிட்டோருக்கு எதிராக, சட்டவிரோத பணப் பரிமாற்றத் தடைச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறையினர் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக, கடந்த 2023-ஆம் ஆண்டு சென்னை சிபிஐ நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி பொன்முடி, அவரது மகன் கௌதம சிகாமணி உள்ளிட்டோர் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுக்களில், மூல வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டதால், சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்ட வழக்கை தொடர்ந்து விசாரிக்க முடியாது. எனவே, அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

இந்த மனுக்கள் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தன. வழக்கை விசாரித்த நீதிபதிகள், உச்சநீதிமன்ற உத்தரவின்படி மூல வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பொன்முடி உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளதால், அமலாக்கத் துறை வழக்கை தொடர அனுமதிக்க முடியாது எனக் கூறி, வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டனர்.

‘ஜெம்’ வீரமணி 3-ஆவது வழக்கில் கைது: மேலும் இரு காவல் அதிகாரிகளிடம் விசாரணை

சென்னை, அக். 13: சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த விவகாரத்தில் ஜெம் வீரமணி மூன்றாவது வழக்கில் கைது செய்யப்பட்டார். இந்த விவகாரத்தில் மேலும் இரு காவல் அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழுவினர் விசாரணை செய்தனர்.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக ‘ஜெம்’ கிரானைட் நிறுவன உரிமையாளர் வீரமணி மற்றும் அவரது உதவியாளர் சாந்தி, அவர் கணவர் மகேந்திர சிம்ஹன், கணேசன், கார் ஓட்டுநர்கள் லாசர், பார்த்திபன், பாபு ஆகியோர் ஆகியோர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர்.

இந்த விவகாரம் குறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையர் தேன்மொழி தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவினர் விசாரணை செய்கின்றனர். ஜெம் வீரமணி மீது இதுவரை 10 சிறுமிகள் புகார் அளித்துள்ளனர். இதுவரை 7 வழக்குகள் வீரமணி மீது பதிவு செய்யப்பட்டுள்ளன.

வீரமணியிடம் பணம் பறிப்பு: வீரமணி, சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்தது குறித்து 2025 அக்டோபரில் சென்னை காவல் துறையில் விடியோ ஆதாரத்துடன் புகார் செய்யப்பட்டது. ஆனால், புகாரின்பேரில் காவல் துறை வழக்குப் பதிவு செய்துவிட்டு, விடியோவில் இருப்பவர்கள் யாரேன்று தெரியவில்லை என்று வழக்கை முடித்து வைக்க முயன்றது. ஆனால், போக்ஸோ நீதிமன்றம், அதை நிராகரித்து விசாரணைக்கு உத்தரவிட்டது.

உயர் அதிகாரிகளிடம் விசாரணை: இந்த விவகாரத்தில் மேலும் துப்பு துலக்கும் வகையிலும், வழக்கை முடித்து வைக்க முயன்ற புகார் தொடர்பாகவும் காவல் துறை உயர் அதிகாரிகளிடம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக அப்போது சென்னை பெருநகர காவல் துறை ஆணையராக இருந்த ஏடிஜிபி ஏ.அருண், கூடுதல் காவல் ஆணையராக இருந்த ஐஜி கண்ணன் ஆகியோரிடம் சிறப்பு புலனாய்வுக் குழு 3 மணி நேரம் விசாரணை செய்தது.

இதன் தொடர்ச்சியாக அப்போது மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையராக இருந்த ஏ.ராதிகா, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு துணை ஆணையராக இருந்த வனிதா ஆகியோரிடம் விசாரணை நடத்தினர்.

3-ஆவது வழக்கில் கைது: இதற்கிடையே, ஜெம் வீரமணி மீது ஏற்கெனவே 2 வழக்குகளில் கைது நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், 3-ஆவது வழக்கில் செவ்வாய்க்கிழமை கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சிறப்பு புலனாய்வுக் குழு, தனது அடுத்தகட்ட விசாரணை அறிக்கையை அக்.27-ஆம் தேதி போக்ஸோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது.

பேங்க் ஆப் பரோடா 119
பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம், துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.
Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் மற்றும் முகவரி:
கடன்தாரர்: M/s AKSHARA AGARBATTIES AND INDUSTRIES, பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி. S. பத்மஸ்ரீ, க/பெ. A.P. சிவகுமார், கதவு எண். 1/122, அகரம் கிராமம், வாத்தியார் வட்டம், புதுப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம் - 635 651. மேலும் ஒரு முகவரி: கதவு எண். 46, இரண்டாவது பிரதான சாலை, வயலிகாவல், பெங்களூரு வடக்கு, கர்நாடகா - 560003. ஜாமீன்தாரர்: திரு. A.P. சிவகுமார், த/பெ. பொன்னுசாமி, கதவு எண். 1/122, அகரம் கிராமம், வாத்தியார் வட்டம், புதுப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம் - 635 651. மேலும் ஒரு முகவரி: கதவு எண். 46, இரண்டாவது பிரதான சாலை, வயலிகாவல், பெங்களூரு வடக்கு, கர்நாடகா - 560003.

மொத்த நிலுவைத் தொகை: 04.10.2026 அன்றுள்ளபடி ரூ.66,17,629.41/- மேலும் 04.10.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவீனங்கள்.
சுவாதீனம் நிலை : மெய்நிலை

அடமானச் சொத்தின் விரிவான விவரம் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின் அதன் விவரம்: வேலூர் பதிவு மாவட்டம், திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி சார்பதிவகம், அகரம் கிராமம், சர்வே எண். 3/1ல் அமைந்துள்ள ஜோலார்பேட்டை ஒன்றியம் மற்றும் அகரம் கிராம ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட ஏக்கர் 0.50 சென்ட் (0.20.0 ஹெக்டேர், 21,800 சதுர அடி, 2025.26 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடம் அதனைச்சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்: சாலை, தெற்கில்: ராமன் மற்றும் முத்து ஆகியோரின் நிலம், கிழக்கில்: இளகராஜ் மற்றும் ராமன் ஆகியோரின் நிலம், மேற்கில்: சின்னதுரை அவர்களின் நிலம். Geographical Coordinates: Latitude : 12.549283 N Longitude : 78.521712 E

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 51,30,000/- டேவணித் தொகை ₹ 5,13,000/- ஏல உயர்வு தொகை ₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: 26.10.2026, மதியம் 01.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
மின் ஏல தேதி & நேரம் 30.10.2026 அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை | வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்
EMD தொகை செலுத்த கடைசி தேதி : 30.10.2026 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://bankofbaroda.bank.in/e-auction & ஆன்லைன் விற்பனைக்கான https://baanknet.com. இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: 044-28885428 எண்ணிலும் கைபேசி எண். 8940056367 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளவும்
விதிமுறைகள் & நிபந்தனைகளை அறிய இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : 13.10.2026
இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி மாவட்டம்
தூய்மை பாரத இயக்கம் (கிராமின்)
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. முழுமையான விவரங்களுக்கு http://tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் அவர்களால், தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) திட்டத்தின்கீழ் [illegible] ஊராட்சி ஒன்றியம், [illegible] கிராம ஊராட்சி, மலக்கசடு மேலாண்மை சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறை முறை வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை http://tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில், இலவசமாக, 13.10.2026 முதல் 30.10.2026 வரையிலான காலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.
4. பொதுவான நேரம் மற்றும் நாள் :
(i) மின் ஒப்பந்த படிவம் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: 30.10.2026 மாலை 3.00 மணி
(ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 30.10.2026 மாலை 4.00 மணி முதல்

இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி
செ.ம.தொ.இ.1115/ஒப்பந்தப்புள்ளி/2026

CHANGE OF NAME
I, Given name: LOGANATHAN
Surname: DAMODARAN
(Old Name)
S/o. Loganathan,
Date of birth: 15.05.1979
residing at Plot No.25, 2nd Street,
Balaji Nagar Main Extn, Dharapadavedu,
Vellore-632007, Tamil Nadu
shall henceforth be known as
Given name: DAMODARAN
Surname: LOGANATHAN
(New Name)
Katpadi, 12.10.2026
Given name: Loganathan
Surname: Damodaran

DBS
ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் தங்க நகைக் கடன் வாடிக்கையாளர்கள் தங்களுடைய கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டனர் மற்றும் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்பட்ட பல நினைவூட்டல் அறிவிப்புகள், வங்கியில் பதிவு செய்யப்பட்ட அவர்களின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
கீழே குறிப்பிட்ட ஏல தேதி அல்லது அதற்கு முன்பாக முழு கடன் தொகையும் செலுத்தப்படாவிட்டால், வாடிக்கையாளர்களின் பிணையங்கள் கீழே குறிப்பிட்ட ஏல தேதி அன்று காலை 11 மணிக்கு அல்லது அதற்கு பிறகு வேறு எந்த வசதியான தேதியிலும், மறு அறிவிப்பு இல்லாமல் மற்றும் வங்கியின் முழுமையான விருப்பத்தின் பேரில் வங்கியால் பொது ஏலத்தில், வங்கி வளாகத்தில் அல்லது https://egold.auctiontiger.net என்ற மின்-ஏல தளம் மூலம் விற்கப்படும்.

ஏலத் தேதி : 17.11.2026

குறிப்பு#	வாடிக்கையாளர் பெயர்	கிளை பெயர்	மொத்த எடை	நிகர எடை
10435701	P. குல்னாஸ்	ஆம்பூர்	5.7	5.7
10435710	விக்னேஷ் சபாரதிநாம்	ஆம்பூர்	22.1	22
35934038	ரேவதி மகேந்திரன்	சுந்திலி	30.3	30
35933522	சசிகலா பெருமாள்	சுந்திலி	22.2	22

இடம் : சென்னை
நாள் : 12.10.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
DBS வங்கி இந்தியா லிமிடெட்
*DBS வங்கி இந்தியா லிமிடெட், சிங்கப்பூர் DBS வங்கி லிமிடெட் நிறுவனத்தின் முழு உரிமத்தின் கீழ் இயங்கும் துணை நிறுவனமாகும்.

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

அறிவிப்பு
சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

வருமானப் பகிர்வு மற்றும் மூலதனம் திரும்பப் பெறுவதற்கான பதிவு தேதி (IDCW)

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் அறங்காவலரான சுந்தரம் டிரஸ்டீ கம்பெனி லிமிடெட், பின்வரும் திட்டங்களின் கீழ் ரூ. 10/- முகமதிப்பின் மீது வருமான விநியோகம் மற்றும் மூலதனத் திரும்பப் பெறுதல் (IDCW) ஆகியவற்றை அறிவித்துள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்:

திட்டத்தின் பெயர்	திட்டம்	விருப்பம்	பதிவு தேதி#	IDCW தொகை* (ஒரு யூனிட்டுக்கு ரூ.)	ஒரு யூனிட்டுக்கு NAV அக்டோபர் 12, 2026 (ரூ.) அன்று
சுந்தரம் அக்ரசிவ் ஹைபிரிட் ஃபண்ட்	வழக்கமான திட்டம்	மாதாந்திர IDCW	அக்டோபர் 16, 2026	0.210	23.1764
	நேரடி திட்டம்	மாதாந்திர IDCW		0.330	36.4649
சுந்தரம் டைனமிக் அசெட் அலோகேஷன் ஃபண்ட் (முன்பு சுந்தரம் பேலன்ஸ்டு அட்வான்டேஜ் ஃபண்ட் என்று அழைக்கப்பட்டது)	வழக்கமான திட்டம்	மாதாந்திர IDCW		0.115	13.4081
	நேரடி திட்டம்	மாதாந்திர IDCW		0.140	16.7105

அல்லது குறிப்பிட்ட தேதி வணிகம் அல்லாத நாளாக இருந்தால் அதற்கு அடுத்த வணிக நாள்.
* பொருந்தக்கூடிய வகையில், மூலத்தில் பிடித்தம் செய்யப்படும் வரியைக் கழித்த பிறகு வருமானப் பகிர்வு மேற்கொள்ளப்படும் / IDCW (வருமானப் பகிர்வுத் தொகை) வழங்கப்படும்.
IDCW (வருமான விநியோகத் தொகை) வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அத்திட்டத்தின் நிகர சொத்து மதிப்பு (NAV) அத்தொகை மற்றும் பொருந்தக்கூடிய சட்டரீதியான வரிகளின் அளவிற்கு ஏற்ப குறையும். IDCW வழங்கலானது, மேலே குறிப்பிடப்பட்ட ஒரு யூனிட்டிற்கான IDCW தொகை அல்லது 'பதிவுத் தேதியில்' (Record Date) கிடைக்கக்கூடிய விநியோகிக்கத்தக்க உபரித் தொகை - இவற்றில் எது குறைவோ, அந்த அளவிற்கு அமையும். கடந்த காலச் செயல்பாடு எதிர்காலத்திலும் தொடரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களின் IDCW விருப்பத் தேர்வின் கீழ் உள்ள யூனிட் உரிமையாளர்களில், அந்தந்த 'பதிவுத் தேதியில்' யூனிட் உரிமையாளர் பதிவேட்டில் பெயர்கள் இடம்பெற்றுள்ள அனைவரும் IDCW-ஐப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

இடம்: சென்னை
தேதி: அக்டோபர் 14, 2026
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615
கார்ப்பரேட் அலுவலகம்: 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.